கற்றலுக்குப் பாதை அமைப்போம்

# முன்னேறுவோம்

# தமிழ்

**TAMIL**

வகுப்பு 3

மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்.

## முன்னுரை

2019 முதல் 2021 வரையிலான கோவிட் பெருந்தொற்றின் காரணமாக உருவான சூழ்நிலையால் மாணவர்களுக்கு நேரடிக் கல்வி முழுமையாகக் கிடைக்கவில்லை. மாணவர்களின் கற்றலில் சில இடைவெளிகள் இருப்பதாக 2022 இல் நடைபெற்ற முதல் பருவத்தேர்வுத் தாள்களை மதிப்பீடு செய்தபோதும், ஆசிரியர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டபோதும் தெரிய வந்தது. முன் வகுப்புகளில் கிடைக்கவேண்டியிருந்த சில கருத்துகள் மாணவர்களுக்கு மீண்டும் கிடைப்பதற்கும் தொடர்கல்வியை உறுதிப்படுத்துவதற்கும் உதவுகின்ற செயல்பாடுகளை உட்படுத்தி ஒரு சிறுநூல் உருவாக்கி வழங்க உள்ளோம். மாணவர்களுக்கு ஏற்பட்ட கற்றல் இடைவெளிக்குத் தீர்வுகாணும் வகையில் தேவையான விளக்கங்களும் செயல்பாடுகளும் இந்நூலில் உட்படுத்தப்படுள்ளன. மாணவர்கள் சுய கற்றல் அல்லது ஆசிரியர்களின் உதவியுடன் இச் செயல்பட்டு நூலைப் பயன்படுத்தித் தொடர்கல்வியில் நன்னம்பிக்கையோடு முன்னேற இயலட்டும்; வாழ்த்துகள்.

**இயக்குநர்**

எஸ்.ஸி.இ.ஆர்.டி

## உள்ளடக்கம்


- கதை எழுதுதல்
- வாக்கியங்கள் உருவாக்குவோம் (1)
- விடுகதை
- குறிப்பு எழுதுவோம்
- பாடல் வரிகளை நிறைவு செய்வோம்
- வளரும் வாக்கியம்
- உரையாடல் எழுதுவோம்
- வாக்கியங்கள் உருவாக்குவோம் (2)

# கதை எழுதுதல்


## கதைக் குறிப்பை வாசிப்போம்

### கதை குறிப்பு

- ஒரு மரத்தில் காகத்தின் கூடு
- பாம்பு முட்டைகளை உடைத்தல்.
- காகம் பார்த்து வருந்துதல்.
- காகம் நரியிடம் ஆலோசனைக் கேட்டல்.
- காகம் இளவரசியின் முத்து மாலையை எடுத்து பறந்து வருதல்.
- காவலர்கள் விரட்டுதல்.
- காகம் இளவரசியின் முத்து மாலையை பாம்பின் புற்றினருகே போடுதல்.
- காவலர்கள் பாம்பை கொல்லுதல்.

குறிப்புகளின் அடிப்படையில் கதையை வரிசைப்படுத்தி கூறுவோம். எத்தனைபேருக்கு கதையை கூறமுடிந்தது. என்பதை நண்பர்களிடம் கேட்டறிவோம்.

**கருத்து வரைபடத்தின் அடிப்படையில் கதையை வரிசைப்படுத்தி கூறுவோம்.**



## கதை எழுதுவோம்

| காகமும் நாகமும் |
|---|
| ................................................................................................................................ |
| ................................................................................................................................ |
| ................................................................................................................................ |
| ................................................................................................................................ |
| ................................................................................................................................ |
| ................................................................................................................................ |
| ................................................................................................................................ |
| ................................................................................................................................ |
| ................................................................................................................................ |
| ................................................................................................................................ |

சொல்லின் இடையில் ஓர் எழுத்தைச் சேர்த்து புதிய சொல்லை உருவாக்குவோம்.

(எ. கா.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கூடு | - | கூட்டு | வசை | - | ............................ |
| தொலை | - | ............................ | பாவை | - | ............................ |
| கதை | - | கவிதை | கவி | - | ............................ |
| குவி | - | ............................ | படை | - | ............................ |

# வாக்கியங்கள் உருவாக்குவோம்

**பாடலை வாசித்து மாதிரிகளைப் போன்று வாக்கியங்கள் உருவாக்குவோம்.**

கூட்டம் கூட்ட மாகவே
குருவி பறந்து சென்றிடும்
குவியல் குவிய லாகவே
கொட்டிக் கற்கள் கிடந்திடும்

கூறு கூறாய்ச் சந்தையில்
கொய்யாப் பழங்கள் விற்றிடும்
குலை குலையாய்த் திராட்சைகள்
கொடியில் அழகாய்த் தொங்கிடும்

வரிசை வரிசை யாகவே
வாழை தோப்பில் நின்றிடும்
மந்தை மந்தை யாகவே
மாடு கூடி மேய்ந்திடும்

சாரை சாரை யாகவே
தரையில் எறும்பு ஊர்ந்திடும்
நேரில் தினமும் பார்க்கிறோம்
நீயும் நானும் தம்பியே

(எ. கா)

- குருவிகள் கூட்டம் கூட்டமாக பறந்து செல்லும்,
- மாடுகள் மந்தை மந்தையாக மேயும்
- 
- 
- 
- 
- 

# விடுகதை

## குறிப்புகளின் அடிப்படையில் புதிரைக் கண்டுபிடித்து எழுதுவோம்

- இது ஒரு பறவை
  மரத்தில் வசிக்கும்
  பச்சை நிறம்
  பேசும் பறவை

- கைகள் எட்டு
  கால் ஒன்று
  மழையிலும் வெயிலிலும் விரியும்

- வீட்டில் வளர்க்கும் பிராணி
  கட்டிலில் உறங்கும்
  கூட்டில் அடைக்க இயலாது
  பாலும் மீனும் விரும்பும்
  எலியைத் தேடி பிடிக்கும்

- இது ஒரு மலர்
  மாலை கட்ட உதவும்
  மணமுள்ள மலர்
  நேரு மாமா விரும்பும் மலர்

## விடுகதைக்கு பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுவோம்.

- தாளை கொடுத்தால் தின்னும் தண்ணீர் குடித்தால் மடியும்
- உச்சியில் பாரம் உரசினால் தீ பிடிக்கும்
- சூடாக இருப்பான் சுருக்குகளை நிவர்த்தி செய்வான்
- மத்தாப்பு எரியுது; பட்டாசு வெடிக்குது
- சின்னஞ்சிறு வீட்டில் சிப்பாய்கள் பலபேர்

(தேப்புப் பெட்டி, மின்னல் இடி, தீப்பெட்டி, தீக்குச்சி, தீ

# குறிப்பு எழுதுவோம்

1. **மாதிரி**




**வாழையின் சிறப்புக்கள் :**

- உணவு உண்ண வாழை இலை பயன்படுகிறது.
- எல்லா பாகங்களும் பயனுள்ளவை.
- பலதரப்பட்ட வகைகள் உள்ளன(செவ்வாழை, ஏத்தன்)
- பழங்கள் மிகுந்த சுவையுடையது.
- தண்டு, பூ போன்றவை கறி வைக்க உதவுகிறது.
- சில பாகங்கள் மருந்தாக பயன்படுகிறது.

## வாழை மரம்

இது வாழை மரம். வாழை மரத்தின் பல்வேறு பாகங்கள் நமக்கு மிகுந்த பயனுள்ளதாக உள்ளது. வாழை இலை உணவு உண்பதற்கு பயன்படுகிறது. வாழைப் பழங்கள் மிகுந்த சுவையுடையது. இதன் தண்டும், பூவும் கறிவைக்க உதவும். வாழையின் சில பாகங்கள் நோய்களுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது. வாழையில் செவ்வாழை, ஏத்தன் போன்ற பலதரப்பட்ட வகைகள் உள்ளன. வாழை மரம் ஒரு சிறந்த மரம்.

2. **மாதிரி**



**யானையின் சிறப்புக்கள் :**

- காட்டில் வாழும் விலங்குகளில் மிகப்பெரியது.
- தும்பிக்கை உண்டு.
- யானை தந்தம் விலை மதிப்பற்றது.
- யானையின் காது முறம் போன்றது.
- திருவிழாக்களில் யானையை பயன்படுத்துவர்.

**யானை**

..........................................................................................................................................


..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

3.



**மயிலின் சிறப்புக்கள் :**

- 
- 
- 
- 
- 

மயில்

............................................................................................................................................

............................................................................................................................................

............................................................................................................................................

............................................................................................................................................

............................................................................................................................................

# பாடல் வரிகளை நிறைவு செய்வோம்

ஐயா வீட்டுக் கொய்யாப் பழம்

ஆசையாகத் தந்த பழம்

கையில் எடுத்து வாயில் வைத்துக்

கடிக்க கடிக்க இனிக்கும் பழம்

..........................................................................................................................................

..........................................................................................................................................

கையில் எடுத்து வாயில் வைத்துக்

கடிக்க கடிக்க இனிக்கும் பழம்

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

(அம்மா, பாட்டி, வாழைப்பழம், ஆரஞ்சுப் பழம்)

**பாடல் வரிகளை நிறைவு செய்யும் போது கவனிக்க வேண்டியவை**

- தாளத்திற்கு ஏற்ப சொற்கள் பயன்படுத்தி இருக்க வேண்டும்.
- முக்கிய கருத்திற்கு ஏற்ற முறையில் பாடல் வரிகள் அமைக்க வேண்டும்.
- பாடலில் கருத்து முழுமை பெற வேண்டும்.

# வளரும் வாக்கியம்

## விளையாடுங்கள்

நீங்கள் உங்கள் ஒரு நண்பருடன் சேர்ந்து விளையாடுங்கள். ஒருவர் முதலில் ஏதேனும் ஒரு சொல்லைக் கூறவேண்டும். அடுத்தவர் அந்த சொல்லுடன் வேறொரு சொல்லை இணைத்துக் கூறவேண்டும். அந்த இரு சொற்களும் விடு படாமல் மேலும் ஒரு சொல்லை சேர்த்து வாக்கியங்களை விரிவுபடுத்த வேண் டும். மிகப்பெரிய வாக்கியம் உருவாக்கியது யார்.? அவர் வெற்றி பெற்றவர்.

**மாதிரி**

நீங்கள் : வந்தேன்

நண்பர் : நான் வந்தேன்

நீங்கள் : நான் நேற்று வந்தேன்

நண்பர் : நான் நேற்று காலையில் வந்தேன்.

நீங்கள் : நான் நேற்று காலையில் பேருந்தில் வந்தேன்.

## எழுதுங்கள்

**பறவை**

- மயில் பறவை
- மயில் அழகான பறவை
- மயில் ஆடும் அழகான பறவை
- ..................................................................
- ..................................................................

**கீழே தரப்பட்டுள்ள சொல்லைப் பயன்படுத்தி வளரும் வாக்கியமாக எழுதுவோம்.**

குயில்

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

பரிசு

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

……………………………………………………………………

# உரையாடல் எழுதுவோம்

**மாதிரி**

திருவனந்தபுரம் மிருகக்காட்சி சாலைக்கு சுற்றுலா சென்று வந்த எழிலன் தன் நண்பன் கலைவாணனிடம் சுற்றுலாவில் தான் கண்ட காட்சிகளை கூறினான். எழிலனும் கலை வாணனும் என்னென்ன உரையாடியிருப்பார்கள்.?

| | | |
|---|---|---|
| கலைவாணன் | : | ஹாய் எழிலா! உன்னைப் பார்க்கவே முடியவில்லையே! |
| எழிலன் | : | எங்கள் பள்ளியிலிருந்து சுற்றுலா சென்றிருந்தோம். |
| கலைவாணன் | : | சுற்றுலாவா? எங்கே சென்றிருந்தீர்கள்? |
| எழிலன் | : | திருவனந்தபுரம் மிருகக்காட்சி சாலைக்கு |
| கலைவாணன் | : | எப்பொழுது சென்றீர்கள்? |
| எழிலன் | : | இரண்டு நாட்களுக்கு முன்னர் சென்றோம். நேற்று இரவு தான் திரும்பினோம். |
| கலைவாணன் | : | சுற்றுலாவில் உனக்கு மிகவும் பிடித்தது எது? |
| எழிலன் | : | மிருகக்காட்சி சாலை |
| கலைவாணன் | : | அங்கு என்னென்ன பார்த்தாய்? |
| எழிலன் | : | பலதரப்பட்ட பறவைகள், விலங்குகள், சிம்பன்ஸி குரங்கின் சேட்டையை மிகவும் ரசித்தேன். |
| கலைவாணன் | : | அப்படியா? எனக்கும் போக ஆசை |
| எழிலன் | : | கண்டிப்பாக நடக்கும். வாழ்த்துக்கள் |
| கலைவாணன் | : | நன்றி. |

**உரையாடலை வாசித்தீர்களா?**

- உரையாடல் முழுமை அடைந்துள்ளதா?
- பலதர வாக்கியங்கள் வந்துள்ளதா? ( வினா வாக்கியம் )
- வாக்கிய அமைப்பு சரியாக கடைபிடிக்கப்பட்டுள்ளதா?
- உரையாடலில் கருத்து தெளிவு உள்ளதா?

## உரையாடலை முழுமைப்படுத்துங்கள்

எழிலன் கலைவாணனின் வீட்டிற்குச் சென்றான். இருவரும் கலைவாணனின் பூந்தோட்டத்திற்குச் சென்றார்கள். பலவண்ண பூக்கள் பூத்துக்குலுங்கின. எழிலன் கலைவாணனிடம் பூந்தோட்டத்தைப் பற்றி கேட்டறிந்தான். இருவரும் என்னென்ன பேசியிருப்பார்கள்?

எழிலன் : பூந்தோட்டம் மிக அருமையாக இருக்கிறது.

கலைவாணன் : நன்றி கலைவாணா!

எழிலன் : ................................................................................

கலைவாணன் : ................................................................................

எழிலன் : ................................................................................

கலைவாணன் : ................................................................................

எழிலன் : ................................................................................

கலைவாணன் : ................................................................................

**உரையாடல் குறிப்பு**
(பூக்களின் வகைகள், பராமரிப்பு, விரும்பியது)

- வாக்கியங்கள் முழுமையடைய வேண்டும்.
- உரையாடல் முழுமையடைய வேண்டும்.
- கருத்துத் தெளிவு வேண்டும்.
- பலதரப்பட்ட வாக்கியங்கள் வேண்டும்.
- உரையாடலுக்கிடையே தொடர்பு வேண்டும்.

# வாக்கியங்கள் உருவாக்குவோம்

| | | |
|---|---|---|
| நான் | நேற்று | ஓடினோம் |
| நீ | | பாடுவோம் |
| நாங்கள் | நாளை | பாடினாய் |
| | | வருவேன் |
| | | ஆடினேன் |

- நாங்கள் நேற்று ஓடினோம்
- ……………………………………………………………………………………
- ……………………………………………………………………………………
- ……………………………………………………………………………………
- ……………………………………………………………………………………
- ……………………………………………………………………………………